**செ. தாமோதரன்**
வேளாண்மைத் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009

நாள் 7.11.2012

**மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு,**

அன்புடையீர்,

வணக்கம். கோவை மாவட்டம், பொள்ளாச்சி தெற்கு ஊராட்சி ஒன்றியம், கோலார்பட்டியில் அமைந்துள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பொதுமக்கள் கேரளா மற்றும் தமிழகத்தில் இருந்து பழனி கோவிலுக்கு நடைபயணம் செய்வதாலும், விபத்துக்கள் அதிகம் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை பொதுமக்களின் நலன்கருதி அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்தவும், மேலும் கஞ்சம்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை முதன்மை ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தி 30 படுக்கை வசதி கொண்ட மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றித்தர ஆவன செய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி.

தங்கள் அன்புள்ள

07-11-12

**(செ. தாமோதரன்)**

**POLLACHI V. JAYARAMAN,** M.A., M.Phil.,
DEPUTY SPEAKER
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

DY. SPEAKER, TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

SECRETARIAT
CHENNAI-600 009

Dated: ..................................

பெறுநர்

**மாண்புமிகு . டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்,**
தமிழ்நாடு அரசு,
முதலமைச்சர் தமிழ்நாடு அரசு,
தலைமைச் செயலகம்,
சென்னை –9

அன்புடையீர்,

வணக்கம். கோவை மாவட்டம், பொள்ளாச்சி தெற்கு ஊராட்சி ஒன்றியம், உடுமலைபேட்டை சட்ட மன்ற தொகுதிக்குட்டபட்டகோலார்பட்டியில் அமைந்துள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பொதுமக்கள் கேரளா மறறும் தமிழகத்தில் இருந்து பழனி கோவிலுக்கு நடைபயணம் செய்வதாலும், தேசிய நெடுஞ்சாலை அமைந்துள்ளதுள்ளதால் விபத்துக்கள் அதிகம் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை பொதுமக்களின் நலன்கருதி அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்தவும், மேலும் தெற்கு ஒன்றியத்தின் மையப்பகுதியில் அமைந்துள்ள கஞ்சம்பட்டி அரசு சுகாதார நிலையத்தை முதன்மை ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தி 30 படுக்கை வசதி கொண்ட மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றித்தர ஆவன செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி.

என
அன்புடன்,

நகல்:

3/12/2012

கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை : திருமதி. அர்ச்சனா பட்நாயக். இ.ஆ.ப.,

ந.க.எண்.9959/2014/ஆ4

நாள்: 04.09.2014

பொருள்: நில உரிமை மாற்றம் - பொள்ளாச்சி வட்டம் - கஞ்சம்பட்டி கிராமம் - நத்தம் க.ச.எண்.390/8ல் 140 சதுர மீட்டர் தானிய கிடங்கு அமைக்க –தி/வா.காசிபட்டிணம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தினர் கோரியது – நில உரிமை மாற்றம் செய்வதை முன்னிறுத்தி – முன்நுழைவு அனுமதி வழங்குதல் - தொடர்பாக.

படிக்கப்பட்டவை:
1. காசிப்பட்டணம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க தலைவர் கடிதம் நாள்: 09.06.2014.
2. பொள்ளாச்சி வட்டாட்சியர் ந.க. 10457/2013/ஆ5 நாள்:17.06.2014.
3. பொள்ளாச்சி சார்ஆட்சியர் ந.க.1522/2014/ஆ5 தேதி: 17.06.2014 மற்றும் 07.08.2014.

******

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், கஞ்சம்பட்டி கிராமம், க.ச.எண்.390/8 கஞ்சம்பட்டி கிராம நத்தத்தில் ஊராட்சி கட்டிடம் என வகைபாடு செய்யப்பட்ட நிலத்தில் 140 சதுர மீட்டர் தானிய கிடங்கு அமைக்க "காசிபட்டினம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம்" பார்வை 1-ல் படிக்கப்பட்ட கடிதத்தில் கோரியதன் பேரில் மேற்படி சங்கத்திற்கு முன்நுழைவு அனுமதி வழங்குவது தொடர்பாக, பார்வை-2 மற்றும் 3-ல் படிக்கப்பட்ட கடிதங்களில் முறையே பொள்ளாச்சி வட்டாட்சியர், மற்றம் பொள்ளாச்சி சார்ஆட்சியர் ஆகியோர் அறிக்கை சமர்ப்பித்துள்ளார்கள்.

**நிலத்தின் அமைப்பு**

முன்நுழைவு அனுமதி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள கஞ்சம்பட்டி கிராம நத்தம் புல எண்.390/8ல் மொத்த பரப்பு 1000 ச.மீ கிராம கணக்குகளில் ஊராட்சி கட்டிடம் என வகைபாடு செய்யப்பட்டுள்ளது. புலத்திற்கு கிழக்கிலும், தெற்கிலும் சாலையும், மேற்கிலும் வடக்கிலும் ஊராட்சி கட்டிட வளாகமும் அமைந்துள்ளது.

**பரப்பு**

முன்நுழைவு அனுமதி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள கஞ்சம்பட்டி கிராம நத்தம் புல எண்.390/8 உள்வட்ட அளவரால் அளவீடு செய்து 140 ச.மீ என கணக்கிடப்பட்டுள்ளது. சரியான பரப்பு உட்பிரிவு ஆவணங்களுடன் நில உரிமை மாற்ற முன்மொழிவுகளுடன் வழங்குவதாக தெரிவித்துள்ளார்.

**விளம்பரம் மற்றும் ஆட்சேபணைகள்**

பிரஸ்தாப புலத்தை நில உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஆட்சேபணைகள் ஏதுமிருப்பின் தெரிவிக்கக் கோரி கிராமத்தில் 30.05.2014 அன்று 'அ1' விளம்பரம் செய்யப்பட்டது. இதுநாள் வரை பொதுமக்களிடமிருந்தோ இதர அமைப்புகளிடமிருந்தோ ஆட்சேபணைகள் ஏதும் வரப்பெறவில்லை. மேலும் கஞ்சம்பட்டி ஊராட்சி மன்றம் சார்பில் நில உரிமை மாற்றம் செய்ய எண்.63/2013ன் படி இசைவு தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது. மேலும் பொதுமக்கள் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

**ஆக்கிரமிப்புகள்**

நில உரிமை மாற்றம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள புலம் கிராம ஊராட்சியால் சுற்றுச்சுவர் கட்டப்பட்டு ஊராட்சி பயன்பாட்டில் உள்ளது. ஆக்கிரமிப்புகள் ஏதுமில்லை.

**நில மதிப்பு**

மேற்படி புலத்திற்கு நிலமதிப்பு நிர்ணயம் செய்யும் பொருட்டு கோமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் 01.06.2013 முதல் 15.07.2014 முடியவுள்ள காலங்களில் மேற்படி கிராமத்தில் நடைபெற்ற விற்பனைப்புள்ளி விபரங்கள் சேகரித்து பரிசீலிக்கப்பட்டது. மேற்படி காலங்களில் மொத்தம் 113 விற்பனைகள் நடைபெற்றுள்ளது. அதில் விவசாய நிலம், தொலைவு, கட்டிடத்துடன் கூடிய விற்பனை போன்ற காரணங்களுக்காக இதரவிற்பனைகள் தள்ளுபடி செய்யப்பட்டு வரிசை எண்.87ல் நடைபெற்ற விற்பனைக்காலை மாதிரி நிலமாகத் தேர்வு செய்யப்பட்டது. ஆவண எண் 918/14 நாள் 03-04-2014 ன்படி க.ச 232/1A நத்தம் புல எண் 408/4ல் 135.54ச.மீ ரூ.1,10,000/-க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. அதன்படி ஒரு சதுர மீட்டர் மதிப்பு ரூ.812/- பெறுகிறது. மேற்படி புலத்தின் அரசு வழிகாட்டி மதிப்பு சதுர மீட்டர் ஒன்றிற்கு ரூ.755/- பெறுகிறது.

எனவே மேற்படி விற்பனை மதிப்பையே (சதுர மீட்டர் ஒன்றிற்கு ரூ.812/-) நில உரிமை மாற்றம் செய்ய கோரும் புலத்திற்கு நிலமதிப்பாக நிர்ணயம் செய்யலாம். அதன்படி நில உரிமை மாற்றம் செய்யப்படும் 140 சதுர மீட்டர் நிலத்தின் மதிப்பு ரூ.1,13,680/- ஆகிறது. மேற்படி மதிப்பின் அடிப்படையில் கஞ்சம்பட்டி கிராம புல எண்.390/8ல் 140 சதுர மீட்டர் காசிபட்டணம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யலாம் என தெரிவித்துள்ளார்கள்.

**மரங்கள்**

முன்நுழைவு அனுமதி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள கஞ்சம்பட்டி கிராம நத்தம் புல எண்.390/8ல் ஒரு மே ப்ளவா் மரம், ஒரு புங்க மரம், ஒரு வேப்ப மரம் (பெரியது) உள்ளது. மேற்படி மரங்களை கட்டிடம் கட்ட வெட்ட அவசியம் ஏற்படும் போது இது குறித்து பொள்ளாச்சி சார் ஆட்சியரிடம் முறையாக அனுமதி பெற்ற பின்பே வெட்ட வேண்டும் என நிபந்தனை விதிக்கலாம் என தெரிவித்துள்ளார்கள்.

பொது

முன்நுழைவு அனுமதி வழங்க உத்தேசிக்கப்பட்ட புலத்தில் புராதனச் சின்னங்கள் ஏதுமில்லை. தேவாலயம், மசூதி, கோயில் போன்ற வழிகாட்டு சின்னங்கள் ஏதுமில்லை. மேற்படி வங்கிக்கு க்ஞ்சம்பட்டி, நாகூர் நம்பியமுத்தூர் ஆகிய கிராமங்களில் இருந்து காசிபட்டினத்தில் உள்ள வங்கிக்கு பொதுமக்கள் வந்து செல்வது சிரமமாக உள்ளதால் கஞ்சம்பட்டி கிராம நத்தம் புல எண்.390/8ல் 140 ச.மீ நிலம் வங்கி கிளையும், தானிய கிடங்கும் அமைக்க காசிபட்டனம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிக்கு முன்நுழைவு அனுமதி வழங்கலாம். இப்பொருள் தொடர்பாக நபார்டு திட்டத்தின் கீழ் புதிய கட்டிடம் கட்ட நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. எனவே தானிய கிடங்கு அமைத்திட அனுமதி கோரிய காசிப்பட்டினம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி தலைவரின் கோரிக்கையை ஏற்கலாம் என பொள்ளாச்சி சார்ஆட்சியர் மற்றும் வட்டாட்சியர் பரிந்துரை செய்துள்ளார்கள்.

மாவட்ட வருவாய் அலுவலர் புலத்தணிக்கை மேற்கொண்டு பிரஸ்தாப புலத்தை காசிப்பட்டினம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிக்கு தானிய கிடங்கு மற்றும் வங்கி கிளை அமைக்க முன்நுழைவு அனுமதி வழங்கலாம் என தெரிவித்துள்ளார்.

பொள்ளாச்சி சார்ஆட்சியர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலரது பரிந்துரையினை ஏற்று பொள்ளாச்சி வட்டம், கஞ்சம்பட்டி கிராமம், க.ச.எண்.390/8-ல் 140 சதுர மீட்டர் நிலத்தில் தானிய கிடங்கு அமைக்க காசிபட்டினம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திற்க்கு நிலஉரிமை மாற்றம் செய்வதை முன்நிறுத்தி கீழ்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு முன்நுழைவு அனுமதி வழங்கி உத்திரவிடப்படுகின்றது.

அ). பிரஸ்தாப நிலம் எந்த நோக்கதிற்காக வழங்கப்படுகிறதோ அதற்காக மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

ஆ). பிரஸ்தாப நிலமோ, அதன் ஒரு பகுதியோ தேவையில்லையெனில் அதனை உடனடியாக வருவாய்த் துறைக்கு மீள ஒப்படைக்க வேண்டும்.

இ), பிரஸ்தாப நிலத்தில் வங்கி கிளை மற்றும் தானியக்கிடங்கு அமைப்பதைத் தவிர வேறு கட்டுமானப் பணிகள் ஏதும் அரசின் அனுமதியின்றி அமைக்கக் கூடாது.

ஈ) வருவாய்நிலை ஆணை எண் 24(9)-ல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை கடைபிடிக்க வேண்டும்.

உ) நில உரிமை மாற்றம் செய்ய கோரப்பட்டுள்ள 140 சதுர மீட்டர் நிலத்தின் மதிப்பு ரூ.1,13,680/- ஐ அரசு கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

ஊ) பிரஸ்தாப புலத்தில் உள்ள மரங்களை வெட்ட அவசியம் ஏற்படின் பொள்ளாச்சி சார் ஆட்சியரிடம் உரிய அனுமதி பெற வேண்டும்.

பொள்ளாச்சி வட்டம், காசிபட்டினம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திற்க்கு கஞ்சம்பட்டி கிராம நத்தம் புல எண்.390/8ல் 140 சதுர மீட்டர் நிலத்தினை சுவாதீனம் வழங்கி சுவாதீனம் வழங்கப்பட்ட விவரத்தினை உடன் தெரிவிப்பதுடன், சுவாதீனச் சான்றின் நகலுடன், நிலஉரிமைமாற்ற முன்மொழிவினை விரைவில் அனுப்பி வைக்க பொள்ளாச்சி வட்டாட்சியர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(ஒம்) அர்ச்சனா பட்நாயக்,
மாவட்ட ஆட்சியர்,
கோயம்புத்தூர்.

பெறுநர்

வட்டாட்சியர், பொள்ளாச்சி வட்டம்.

நகல்:

1. தலைவர் காசிபட்டிணம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம்
2. சார்ஆட்சியர் பொள்ளாச்சி.
3. இருப்பு கோப்பு.

/ உத்திரவுப்படி /

05.09.2014

மாவட்ட ஆட்சியருக்காக,
கோயம்புத்தூர்.

412

5.9.14

பொள்ளாச்சி V. ஜெயராமன், எம்.ஏ., எம்ஃபில்.,
பேரவைத் துணைத் தலைவர்
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

தலைமைச் செயலகம்
சென்னை–600 009

நாள்: 8-2-2014

பெறுநர்

மாண்புமிகு. டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்,

முதலமைச்சர் தமிழ்நாடு அரசு,
தலைமைச் செயலகம்,
சென்னை – 9.

மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு வணக்கம். கோவை மாவட்டம், பொள்ளாச்சி தெற்கு ஊராட்சி ஒன்றியம் கஞ்சம்பட்டியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இது பொள்ளாச்சியிலிருந்த 16 கி.மீ. தூரத்தில் உள்ளது. எனவே பொதுமக்களுக்கு சிறப்பான மருத்துவ வசதி கிடைப்பதற்கு கஞ்சம்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை கொண்ட மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தி ஆணைவழங்குமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

மேலும் கஞ்சம்பட்டியைச் சுற்றிலும் நிறைய சிறு கிராமங்கள் இருப்பதாலும் 16 கி.மீ. தூரம் உள்ள பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு செல்வதற்கு பதிலாக அருகிலுள்ள கஞ்சம்பட்டியிலேயே மருத்துவம் செய்வதற்கு வசதியாக இருக்கும்.

மேலும் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தும் பட்சத்தில் Specilist டாக்டர்கள் எல்லாம் பணிபுரிகின்ற காரணத்தால் விபத்து நேரங்களில் உடனடியாக உயிரை காப்பாற்றி சிகிச்சை வழங்க ஏதுவாக இருக்கும். எனவே பொதுமக்கள் நலன் கருதி கஞ்சம்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்தி ஆணை வழங்குமாய் பணிவுடன் வேண்டுகிறேன். மேலும் பொள்ளாச்சி தெற்கு ஊராட்சி ஒன்றியத்தின் மையப் பகுதியில் கஞ்சம்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைந்துள்ளதால் பொதுமக்களுக்கு மருத்துவம் பார்ப்தற்கு வசதியாக இருக்கும். எனவே பொதுமக்கள் நலன் கருதி 30 படுக்கை வசதி கொண்ட மேம்படுத்தப்பட்ட அரசு

பொள்ளாச்சி V. ஜெயராமன், எம்.ஏ., எம்.பில்.,
பேரவைத் துணைத் தலைவர்
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

தலைமைச் செயலகம்
சென்னை–600 009

நாள்: ....................................

ஆரம்ப சுகாதார நிலையமாக ஆணைவழங்கி பொதுமக்களுக்கு மருத்துவ வசதி செய்து கொடுக்க ஆவண செய்யுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

நன்றி, வணக்கம்,

தங்கள் உண்மையுள்ள,

8/2/2014

நகல் :

1. மாண்புமிகு டாக்டர். விஜய் பாஸ்கர் M.B.B.S., M.S., அவர்கள்,
   மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்,
   தலைமைச்செயலகம், சென்னை – 9.

2. பொள்ளாச்சி V. ஜெயராமன் M.A., M. Phil., அவர்கள்,
   துணை சபாநாயகர், தமிழ்நாடு சட்டப்பேரவை,
   தலைமைச்செயலகம், சென்னை – 9.

3. உயர்திரு. ராதாகிருஷ்ணன் I.A.S., அவர்கள்,
   முதன்மைச் செயலாளர், சுகாதாரத்துறை,
   தலைமைச் செயலகம், சென்னை – 9.

4. உயர்திரு. இயக்குநர் அவர்கள்,
   இயக்குநர் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை,
   தேனாம்பேட்டை, சென்னை – 6.

5. உயர்திரு. அர்ச்சனா பட்நாயக் I.A.S., அவர்கள்,
   மாவட்ட ஆட்சித்தலைவர்,
   கோவை.

6. உயர்திரு. துணை இயக்குநர் அவர்கள்
   பொது சுகாதாரத்துறை, ரேஸ்கோர்ஸ்,
   கோவை – 18.

சட்டமன்ற உறுப்பினர் ஆகும்
மெ அமைப்பு

பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை–9.

<u>கடிதம் எண்.34124/கே1/2012–2, நாள். 22.10.2012.</u>

அனுப்புநர்
திரு.ப.அழகேசன், எம்.ஏ., பி.எல்., பி.ஜி.டி.எல்.ஏ.,
அரசு துணைச் செயலாளர்.

பெறுநர்
திரு. பொள்ளாச்சி V. ஜெயராமன்,
சட்டமன்ற உறுப்பினர்,
உடுமலைப்பேட்டை சட்டமன்ற தொகுதி,
இல்லம்: 54 திப்பம்பட்டி,
பொள்ளாச்சி – (இணைப்புடன்)

ஐயா,

பொருள்: பள்ளிக்கல்வி – பொது நூலகத் துறை – கஞ்சம்பட்டி ஊர்ப்புற நூலகத்தை கிளை நூலகமாக தரம் உயர்த்த கோருதல் – சார்பு.

பார்வை: தங்களின் கடித நாள் 26.9.2012.

**~~*~~**

பார்வையில் காணும் தங்கள் மனுவில் கஞ்சம்பட்டி ஊர்ப்புற நூலகத்தை கிளை நூலகமாக தரம் உயர்த்துமாறு கோரப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்.255, பள்ளிக் கல்வி (கே2)த் துறை, நாள் 9.10.2012ன்படி மேற்படி நூலகம் கிளை நூலகமாக தரம் உயர்த்தப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது என்ற விவரம் தங்களுக்கு தெரிவிப்பதுடன் அதன் நகல் இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,

அரசு துணைச் செயலாளருக்காக.

**பொள்ளாச்சி V. ஜெயராமன்**
**MA.,M.Phil.,MLA**
**உடுமலைபேட்டை சட்டமன்ற தொகுதி**
**கழக தேர்தல் பிரிவு செயலாளர்**

**54, திப்பம்பட்டி**
**பொள்ளாச்சி**
**செல் : 94430-37044,**
**போன் : 04259-284226(R), 04259-238848 (O)**

வாய்மையே வெல்லும்

தேதி : 11.02.2012

பெறுநர்

மாண்புமிகு. சிவபதி MA.B.L., அவர்கள்,
பள்ளி கல்வித்துறை அமைச்சர், தமிழ்நாடு அரசு,
தலைமை செயலகம், சென்னை – 9.

ஐயா வணக்கம்.

கோவை மாவட்டம், பொள்ளாச்சி கல்வி மாவட்டம் கஞ்சம்பட்டியில் அரசு உயர் நிலைப்பள்ளி உள்ளது. இந்த பள்ளி மாண்புமிகு. டாக்டர் புரட்சித்தலைவி முதலமைச்சர் அம்மா அவர்களால் 1993 ஆம் ஆண்டு உயர்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்தப்பட்ட பள்ளி ஆகும். மேற்படி பள்ளியில் 650 மாணவ மாணவியர் படிக்கின்றனர். 10 ஆம் வகுப்பில் 150 மாணவ மாணவியர் படிக்கின்றனர். மேற்படி பள்ளியிலிருந்து 15 கி.மீ. தூரத்திற்கு மேல் பள்ளி கிடையாது. எனவே மேற்படி பள்ளியில் 10ஆம் வகுப்பு தேர்ச்சி அடையும் பெரும்பாலான பெண்கள் +1 செல்லாமல் படிப்பை நிறுத்திவிடுகின்றனர்.

மேலும் 40 சதவீதம் தாழ்த்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர் படிக்கினறனர். மேலும் எங்களது பள்ளிக்கு சுமார் 30 கிராமத்து மாணவ, மாணவியர்கள் வந்து படிக்கின்றனர். எனவே ஏழை மாணவ மாணவியர் நலன் கருதி 'அன்னையாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்' என மகாகவி பாரதியார் வாக்குப்படி மேல்நிலை பள்ளியாக தரம் உயர்த்தி ஆணை வழங்கிட ஆவண செய்யுமாறு அன்புடன் வேண்டுகிறோம். மேலும் அரசுக்கு செலுத்த வேண்டிய பங்குத்தொகை 2 லட்சம் செலுத்தப்பட்டுள்ளவதற்கான செலுத்திய சீட்டின் போட்டோ நகல் இணைக்கப்பட்டுள்ளது. மேலும் எங்களது பள்ளியில் 86.61 லட்சத்தில் நபார்டு திட்டத்தில் 14 வகுப்பறை மற்றும் 1 ஆய்வுக்கூடம் கட்டுமான பணிகள் துரிதமாக நடைபெற்று கொண்டு உள்ளது என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் வரும் கல்வியாண்டிலேயே எங்களது பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்த ஆணை வழங்கிட வேண்டுமாய் பணிவுடன் வேண்டுகிறேன்.

நன்றி! வணக்கம்,

என அன்புடன்,

[signature]
11/2/2012

நகல் :

மாண்புமிகு. டாக்டர். புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள், முதலமைச்சர்,
தமிழ்நாடு தலைமைச்செயலகம், சென்னை – 9.

உயர்திரு. சபிதா I.A.S., அவர்கள், பள்ளி கல்வித்துறை செயலாளர், தலைமை செயலகம், சென்னை – 9.

உயர்திரு. மணி M.Sc., B.Ed., அவர்கள், இயக்குநர், பள்ளி கல்வித்துறை, கல்லூரி சாலை, சென்னை – 6.

உயர்திரு. ராஜேந்திரன் M.A., B.Ed., அவர்கள், முதன்மை கல்வி அலுவலர், கோவை.

திருமதி.ப. செல்வகுமாரி
செயலாளர்,

தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் ஆசிரியர் கழகம்,
D.P.I. வளாகம், கல்லூரிச் சாலை,
சென்னை – 600 006.

நே.மு.க. எண்: 3402/ஆ/2009, நாள்: 27-05-2009

அன்புடையீர்,

பொருள் : தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் ஆசிரியர் கழகம் – மாநிலப் பொதுக்குழுக் கூட்டம் 12.06.2009 அன்று காலை 10 மணிக்கு நடைபெறுதல் – சார்ந்து.

------

தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் ஆசிரியர் கழகப் பொதுக்குழுக் கூட்டம் 12.06.2009 அன்று காலை 10 மணிக்கு தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் சென்னை–6, கல்லூரிச்சாலை, பள்ளிக் கல்வி இயக்குநர் வளாகத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு பாடநூல் கழக மாநாட்டுக் கூடத்தில் நடைபெற உள்ளது. எனவே, பொதுக்குழு உறுப்பினரான தாங்கள் இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொண்டு தங்கள் ஆலோசனையும், அறிவுரையையும் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இக்கூட்டத்தில் கலந்துக் கொள்ள ஏற்படும் பயணக் கட்டணம் தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் ஆசிரியர் கழக நிதியிலிருந்து ஈடு செய்யப்படும் என்பதையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்காக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தினை பூர்த்தி செய்து உடன் மறு தபாலில் அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள,

(ப. செல்வகுமாரி)

நாள் : ..............................

26.08.2012

Director
Library
26/9/2012

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கு பரிந்துரைக்கப்படுகிறது
செ.தாமோதரன் 26.09.12
Minister for Agriculture
Secretariat, Chennai-600 009

பெறுநர்

மாண்புமிகு R.சிவபதி **M.A.,B.L.,**அவர்கள்,
பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்,
தமிழ்நாடு அரசு,
சென்னை – 9.

ஐயா, வணக்கம்.

கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், கஞ்சம்பட்டி கிராமத்தில் ஊர்புற நூலகம் செயல்பட்டு வருகிறது. மேற்படி கிராமத்தைச் சுற்றிலும் நிறைய சிறிய கிராமங்கள் உள்ளது. பொதுமக்கள் நிறைய பேர் நூலகத்தை பயன்படுத்துகிறார்கள். எனவே, பொதுமக்கள் நலன் கருதி கஞ்சம்பட்டி ஊர்புற நூலகத்தை இந்த ஆண்டு கிளை நூலகமாக தரம் உயர்த்தி ஆணை வழங்க வேண்டுமாய் அன்புடன் வேண்டுகிறோம். மேலும் கஞ்சம்பட்டி ஊராட்சியில் 7000 ஜனத்தொகை உள்ளது. மேலும் கஞ்சம்பட்டியில் நிறைய அலுவலகங்கள் உள்ளது. மேலும் IAS, IPS போன்ற படிப்புகள் படிப்பதற்கு உண்டான நூல்கள் கிளை நூலகத்தில்தான் கிடைக்கும். மேலும் கஞ்சம்பட்டியில் கீழ்க்காணும் அலுவலகங்கள் உள்ளன.

1. ஊரட்சி மன்ற அலுவலகம்
2. கிராம நிர்வாக அலுவலகம்
3. துணை வேளாண்மை விரிவாக்க அலுவலகம்
4. நியாய விலைக்கடைகள் - மூன்று
5. ஊர்புற நூலகம்
6. சமுதாய நலத்திருமண மண்டபம் - மூன்று
7. சௌடேஸ்வரி நெசவாளர் கூட்டுறவு மையம்
8. அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் சித்த மருத்துவப் பிரிவு
9. கால்நடை மருத்துவமனை
10. ஊ.ஒ.தொ.பள்ளிகள் - மூன்று
11. அரசு மேல்நிலைப் பள்ளி

நாள் : .............................

12. அங்கன்வாடிப் பள்ளிகள் - நான்கு
13. உதவி மின்பொறியாளர் அலுவலகம்
14. பால் உற்பத்தியாளர் கூட்டுறவு கிளைச் சங்கம்
15. தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி
16. லட்சுமி விலாஸ் பேங்க்
17. தொலைபேசி நிலையம் - Telephone Exchange
18. அஞ்சல் நிலையம்
19. வேளாண்மை விளைவுப் பொருள் வைப்புக்கிடங்கு மற்றும் உலர்களம்
20. மக்கள் மனமகிழ்மன்றம்
21. மகளிர் சுய உதவிக் குழுக்கள் - 52
22. தாய் சேய் நலவிடுதி
23. சமுதாய தொழில்நுட்ப பயிற்சிக் கூடம் (நாச்சிமுத்து பாலிடெக்னிக்)

எனவே, பொதுமக்கள் நலன் கருதி இந்த ஆண்டு கஞ்சம்பட்டி ஊர்ப்புற நூலகத்தை கிளை நூலகமாக தரம் உயர்த்தி ஆணை வழங்க வேண்டுமாய் அன்புடன் வேண்டுகிறேன்.

நன்றி!

என அன்புடன்

26/8/2012

நகல் : செயலாளர்
நூலகத்துறை
தலைமைச் செயலகம்,
சென்னை-9.

உயர்திரு இயக்குநர் அவர்கள்,
நூலகத்துறை, சென்னை.

**திருமதி.ப. செல்வகுமாரி**
செயலாளர்,

தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் ஆசிரியர் கழகம்,
D.P.I. வளாகம், கல்லூரிச் சாலை,
சென்னை – 600 006.

ந.மு.க. எண்: 3402/ஆ/2009, நாள்: 27-05-2009

*அன்புடையீர்,*

பொருள் : தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் ஆசிரியர் கழகம் – மாநிலப் பொதுக்குழுக் கூட்டம் 12.06.2009 அன்று காலை 10 மணிக்கு நடைபெறுதல் – சார்ந்து.

------

தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் ஆசிரியர் கழகப் பொதுக்குழுக் கூட்டம் 12.06.2009 அன்று காலை 10 மணிக்கு தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் சென்னை–6, கல்லூரிச்சாலை, பள்ளிக் கல்வி இயக்குநர் வளாகத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு பாடநூல் கழக மாநாட்டுக் கூடத்தில் நடைபெற உள்ளது. எனவே, பொதுக்குழு உறுப்பினரான தாங்கள் இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொண்டு தங்கள் ஆலோசனையும், அறிவுரையையும் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இக்கூட்டத்தில் கலந்துக் கொள்ள ஏற்படும் பயணக் கட்டணம் தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் ஆசிரியர் கழக நிதியிலிருந்து ஈடு செய்யப்படும் என்பதையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்காக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தினை பூர்த்தி செய்து உடன் மறு தபாலில் அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள,

(ப. செல்வகுமாரி)